**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.07
https://ngmtamil.in/

# A History of Tamil - Kannada Grammars

**R. Brindha [1*], Dr. P. Kumar [2],**
[1]Ph.D. Research Scholar, Department of Tamil,
Central University of Tamil Nadu,
Thiruvarur – 610 005.
[2]Research Supervisor & Assistant Professor,
Department of Tamil, Central University of Tamil Nadu,
Thiruvarur – 610 005.
Email: pkumar@cutn.ac.in
*Corresponding Author: brindharavisankar@gmail.com.

**Article Info**
Received on 21-April-2026, Revised on 22-April-2026, Accepted on 27-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Tamil and Kannada are languages that belong to the Dravidian language family. In both these languages, literary works have been continuously produced throughout the ages. Grammarians categorize these literary works and compose grammars for them. While there are many reasons for the emergence of such a grammatical work, it is essential to document the grammatical texts that arise over time. History of grammar books identifies this. Accordingly, this article describes the grammatical works that have appeared in Tamil and Kannada over time from a historical perspective.

**Keywords**; *Tamil, Kannada, Dravidian languages, grammar, history.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# தமிழ் - கன்னட இலக்கண வரலாறு

[1]**ர. பிருந்தா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் – 610 005

[2]**முனைவர் ப. குமார்,** நெறியாளர் & உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் – 610 005.

**முன்னுரை:**

தமிழ் – கன்னடம் ஆகிய மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழிக்குடும்ப மொழிகளாகும். இவ்விரு மொழிகளிலும் காலந்தோறும் இலக்கிய நூல்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இவ்விலக்கிய நூல்களை ஒருதிறப்படுத்தி அவற்றிற்கு இலக்கணம் எழுதுவர் இலக்கணிகள். இதுபோன்று ஒரு இலக்கணநூல் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளது எனினும், இவ்வாறு காலந்தோறும் எழும் இலக்கண நூல்களை ஆவணப் படுத்துவது அவசியமாகிறது. இதனை இலக்கண வரலாறு நூல்கள் அடையாளப்படுத்துகின்றன. இவ்வாறு தமிழ், கன்னட மொழிகளில் காலந்தோறும் தோன்றியுள்ள இலக்கண நூல்களை வரலாற்றியல் நோக்கில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**இலக்கணப் பனுவல் தோற்றம்:**

ஒரு இலக்கணநூல் உருவாவதற்கு அக்காலத்திய அரசியல் மற்றும் பண்பாட்டு நிலையில் தோன்றும் இலக்கிய நூல்கள் காரணங்களாக அமைகின்றன. நில அமைப்பிற்கேற்பக் காலந்தோறும் அரசியல், வணிகம், கல்வி, மதம் சார்ந்த மாறுதல்கள் ஏற்படும். இவைகள் அக்காலத்தைப் பிரதிபலிக்கும் வண்ணமாய் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் தோன்றும்.

சமூகத்தில் நடப்பவற்றை அடையாளப் படுத்துவதற்கும், ஆவணப் படுத்துவதற்குமாக இலக்கிய நூல்கள் இருந்துள்ளன. இலக்கியங்களின் போக்கு காலத்திற்கேற்ப மாறுவதன் பொருட்டு இலக்கண நூல்களின் தேவையும் மாற்றமைடைந்து வந்துள்ளன. இதற்கு உதாரணமாக, சிற்றிலக்கியங்கள் தோன்றிய காலங்களில், சிற்றிலக்கியங்களுக்கு இலகக்ணம் கூறும் பாட்டியல் நூல்கள் வளர்ந்ததைக் காணலாம். வீரசோழியம் (11ம்நூ), நேமிநாதம் (12ம் நூ), நன்னூல் (13ம் நூ) இம்மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிறகு 17ம் நூற்றாண்டு வரையில் தமிழுலகில் எழுத்து, சொல்லிலக்கணங்களோ, ஐந்திலக்கண நூல்களோ எதுவும் தோற்றம் பெறவில்லை. இடைப்பட்ட இந்நான்கு நூற்றாண்டுகளில் அகப்பொருள் மற்றும் பாட்டியல் நூல்களே அதிகம் வந்துள்ளன. ஏனெனில் இந்நூற்றாண்டுகளில் சிற்றிலக்கிய நூல்கள் அதிகம் வளர்ந்து வந்தன. அதற்கு இலக்கணம் எழுத பாட்டியல் நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

17ம் நூற்றாண்டிலிருந்து 19ம் நூற்றாண்டு வரையுள்ள இருநூற்றாண்டுகளில் சொல்லிலக்கணங்களுக்கான நூல்களும், ஐந்திலக்கண நூல்களும் அதிகம் தோற்றம் பெற்றுள்ளன. அவ்வாறு வந்துள்ள நூல்கள் தொல்காப்பிய மரபையும், வடமொழி மரபையும் பின்பற்றி வந்துள்ளன. இவற்றின் மூலம் தமிழுலகில் தமிழும் - சமஸ்கிருதமும் அதிகம் கலந்து இலக்கிய நூல்கள் எழுந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

19ம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பியரின் வருகையின் மூலம், தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டு, அந்நாட்டவர்களுக்குத் தமிழை எளிமையாகக் கற்றுக்கொள்ள எளிமைப் படுத்தப்பட்ட இலக்கண நூல்கள் தோன்றின. தமிழ் மொழி இலக்கணங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன. இதற்கு உதாரணங்களாக, ஏ.ஹெச்.ஆர்டன் (A.H. Arden) அவருடைய A Progressive Grammar of Comman Tamil, (1915), ஹெரால்டு எஃப் ஷிப்மேன் (Herold F.Schiffman) அவருடைய A Reference Grammar of Spoken Tamil (1993) ஆகிய நூல்கள் ஆங்கிலேயர்களால் தமிழை எளிமையாகக் கற்க ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இலக்கண நூல்களாகும்.

இவ்வாறு காலத்தின் தேவைக்கேற்ப சமூக மாற்றம், சமய மாற்றம், பிறநாட்டவர் வருகை எனப் பல்வேறு காரணிகளால் ஒரு சமூகமானது மாற்றமடைந்து - மொழியும் மாற்றமடைந்து கொண்டே இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஆகையால் காலந்தோறும் இலக்கண நூல்களின் தேவை இச்சமூகத்திற்கும் இருந்துள்ளது.

**இலக்கண வரலாறு:**

ஒவ்வொரு கால கட்டத்திலும் தோன்றிய இலக்கண நூல்களை வரலாறாகக் காண்பதற்கு இலக்கண வரலாறு நூல்கள் உதவுகின்றன. இவ்விலக்கண வரலாறு நூல்கள், இலக்கண நூல்கள் எழுந்துள்ளக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு அவற்றினை வகைப்படுத்தி வரலாறு அமைப்பில் விளக்குகின்றன. அவற்றினை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, அறுவகை இலக்கணம், பாட்டியல் என காலத்திற்கேற்றவாறு - காலந்தோறும் தோற்றம்பெறும் இலக்கிய வகைக்கேற்ப இலக்கண நூல்களும் தோற்றம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு இலக்கண நூல்களும் தோற்றம் பெறுவதற்கு அக்காலத்தியத் தேவை, அப்போது நடந்துள்ள சமூக மாற்றம், சமய மாற்றம், அரசியல் மாற்றம் ஆகியவற்றால் காலந்தோறும் இலக்கண நூல்கள் உருவாகக் காரணமாக இருந்துள்ளன என்பது இலக்கண வரலாறு நூலினை வாசிப்பதன்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

அவ்வாறு ஏன் ஒவ்வொரு கால கட்டத்திலும் மொழிக்கான இலக்கணங்கள் மாற்றம் பெற்றுத் தோன்றியுள்ளன என்பதையும் அக்கால இலக்கியங்களுடன் அல்லது பனுவல்களுடன் ஒப்பிட்டுக் காண்பது இலக்கண வரலாறுகளே ஆகும். வரிசைப் படுத்துவது மட்டும் வரலாறு அல்ல. “ஒரு நூல்

ஏன் உருவாகியது எப்படி உருவாகியது என்று பார்ப்பதும் வரலாறு தான்." (இலக்கண உருவாக்கம்., 2012, ப.xi) என இலக்கண உருவாக்கம் நூலில் செ.வை.சண்முகம் குறிப்பிடுகிறார்.

"ஒரு நூல் உருவாகிய காலம் என்னவென்று கணிப்பதைவிட, ஒரு காலம் ஏன் ஒரு நூலை உருவாக்கியது என்று பார்ப்பது வரலாற்றைச் சமூக நிலையில் புரிய உதவும்" (இலக்கண உருவாக்கம்., 2012, ப.xi) என இலக்கண உருவாக்கம் நூலில் செ.வை. சண்முகம் குறிப்பிடுகிறார். ஆகையால் சமூகத்தைத் தவிர்த்துவிட்டு வரலாற்றை எப்படிக் காண முடியாதோ அதனைப்போல் வரலாற்றைத் தவிர்த்துவிட்டு இந்தகாலச் சமூகம் ஏன் பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது, ஏன் ஒரு குறிப்பிட்டக் காலச் சமூகம் மட்டும் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது என்பதையும் வரலாற்றைப் காணாமல் சமூகத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இதனைத்தான் செ.வை. சண்முகமும் இலக்கண உருவாக்கம் என்னும் தன்னுடைய நூலில் கூறுகிறார்.

**இலக்கண வரலாற்றின் தேவை:**

இலக்கண வரலாறு என்பது ஒரு மொழியின் பரிணாமம் மற்றும் அதன் கட்டமைப்பு மாற்றங்களைக் காண அவசியமாக இருக்கிறது. ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ப ஒரு இலக்கண நூல் உருவாவதற்கான அவசியத்தை அந்நூலின் மூலம், அச்சமூகப் பின்னணி மற்றும் அவ்விலக்கண நூலின் அவசியத்தையும் காண இயலும். மறைந்த இலக்கண நூல்களைப் பற்றியும் இலக்கண வரலாறு நூல்களில் தான் அந்நூல் மறைந்ததற்கானக் காரணத்தைக் காணமுடியும். இவ்வாறு ஒவ்வொரு நூலின் பின்புலத்தைக் கொண்டு அவ்விலக்கண நூலின் தேவையைக் கருத்தில் கொண்டு காலந்தோறும் வந்துள்ள இலக்கண நூல்களைக் காண்பது இலக்கண வரலாற்றைக் காண்பதாகும். இவ்விலக்கண வரலாற்றின் மூலம், மொழியின் வேர்ச் சொற்கள் மற்றும் எந்த மொழியின் தாக்கம் இம்மொழியில் அதிகம் உள்ளது என்பதைக் காணவும் இலக்கண வரலாறு தேவைப்படுகிறது.

தமிழ் மற்றும் கன்னட மொழிகளின் வரலாற்று அடிப்படையிலான விளக்கத்தை இவ்விரு மொழிகளிலும் தோன்றிய இலக்கிய மற்றும் இலக்கண நூல்களை மையமாகக் கொண்டே ஒவ்வொரு நூற்றாண்டிலும் இரு மொழிகளும் எவ்வாறாக இருந்துள்ளது என்பதைக் காணமுடிகிறது. இலக்கண நூல்கள் தோன்றுவதற்கு இலக்கியங்கள் எவ்வாறாக இருந்துள்ளது என்பதைக் காணவேண்டியுள்ளது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு சமயங்களின் வருகையும் மொழியில் மாற்றத்தை ஏற்படுத்தியவண்ணம் இருந்துள்ளன. அச்சமயங்கள் தங்களின் கொள்கைக் கோட்பாடுகளை எழுத்துக்களின் மூலம் இலக்கியங்களில் பதியவைப்பதன் பொருட்டு அக்கால வரலாற்றை அறிய முடிகிறது. மொழியில் ஒரு காலக் கட்டத்தின் வரலாற்றை அறிய கல்வெட்டுச் சான்றுகள், அகழ்வாராய்ச்சிகள், இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், வரலாற்று நூல்கள், நாளிதழ்கள் ஆகியன உதவுகின்றன.

இவற்றில் இலக்கண நூல்கள் தோன்றக் காரணமும், அந்த இலக்கண நூல்கள் தோன்ற அக்கால இலக்கியமும், சமயமும், வணிகமும், பொருளாதாரமும் மற்ற பிற தாக்கங்களும் எவ்வாறு பின்புலமாக இருந்தது என்பதையும் இலக்கண வரலாறுகளின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றன. ஆகவே ஒரு மொழியை அறிய இலக்கண நூல்களும், இலக்கண வரலாற்று நூல்களும் அவசியமாகின்றன. அவற்றின் வழியாகவே தற்காலத்தில் இருந்து கொண்டு நம்மால் பல நூற்றாண்டுகளுக்கு முன்புள்ள மொழியின் வரலாற்றை அறிந்துகொள்ள முடிகிறது.

**தமிழ் இலக்கண வரலாறு:**

தமிழ் மொழியில் இதுவரை வந்துள்ள இலக்கணங்களை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை மற்றும் தவம் ஆகிய பொருண்மைகளின் அடிப்படையில் வகைப்படுத்துவர். இதில் புலமை மற்றும் தவம் என்னும் பொருண்மையில் அமைந்த இலக்கணங்கள் முறையே, ஆறாவது இலக்கணம் மற்றும் ஏழாவது இலக்கணம் எனக் கூறப்பட்டாலும், பாட்டியல் இலக்கணங்களை (தொடர்நிலைச் செய்யுள் மற்றும் சிற்றிலக்கியம்) ஆறாவது இலக்கணமாகவும், நிகண்டை ஏழாவது இலக்கணமாகவும் அரங்கராசன், சோம. இளவரசு, அருணாச்சலம், தமிழண்ணல், மு.வை.அரவிந்தன், செ.வை.சண்முகம் போன்ற ஆய்வாளர்கள் இவ்வாறாக வகைப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

இலக்கண வரலாறு என்னும் நூலில் சோம. இளவரசு இதுவரைக் கூறியுள்ளத் தமிழிலுள்ள மொத்த இலக்கண நூல்களின் எண்ணிக்கை முப்பது ஆகும். அவை தொல்காப்பியம், இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ்நெறி விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், நேமிநாதம், வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், நன்னூல், அகப்பொருள் விளக்கம், களவியற்காரிகை, பன்னிருபாட்டியல், நவநீதப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், மாறனலங்காரம், மாறனகப் பொருள், பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட் கோவை, பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, முத்து வீரியம், சாமிநாதம், சந்திராலோகம், குவலயானந்தம் ஆகியன அம்முப்பது இலக்கண நூல்களாகும்.

அம்முப்பது இலக்கண நூல்களையும் நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், நூல் எழுந்த காலம் (நூற்றாண்டு), சமயம், உரையாசிரியர் மற்றும் எந்த இலக்கணத்தைக் கூறுவதற்காக எழுதப்பட்ட நூல் என்பதை இலக்கண வகை என்ற பட்டியலின்கீழ் நூல்கள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **நூல்** | **ஆசிரியர்** | **காலம்** | **சமயம்** | **உரையாசிரியர்** | **இலக்கண வகை** |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொல்காப்பியம் | தொல்காப்பியர் | கி.மு.5 | - | பழையவர் அறுவர், புதியவர் நால்வர் | ஐந்திலக்கணம் |
| 2. | இறையனார் களவியல் | இறையனார் | கி.மு முதல் | சைவர் | நக்கீரர் | அகப்பொருள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | (அ) கி.பி. முதல் | | | |
| 3. | புறப்பொருள் வெண்பா மாலை | ஐயனாரித னார் | கி.பி.8 | சைவர் | சாமுண்டி தேவ நாயகர் | புறப்பொருள் |
| 4. | தமிழ்நெறி விளக்கம் | - | கி.பி.12 க்கு முன் | - | நூலாசிரியர் | அகப்பொரு ள் |
| 5. | யாப்பருங்கல ம் | அமிதசாகரர் | கி.பி.10 | சமணம் | குணசாகரர் | யாப்பு |
| 6. | யாப்பருங்கல க் காரிகை | அமிதசாகரர் | கி.பி.10 | சமணம் | குணசாகரர் | யாப்பு |
| 7. | வீரசோழியம் | புத்தமித்திர னார் | கி.பி.11 | பௌத்த ம் | பெருந்தேவனார் | ஐந்திலக்கண ம் |
| 8. | நேமிநாதம் | குணவீரபண் டிதர் | கி.பி.12 | சமணர் | - | எழுத்து, சொல் |
| 9. | வெண்பாப் பாட்டியல் | குணவீரபண் டிதர் | கி.பி.12 | சமணர் | - | பாட்டியல் |
| 10. | தண்டியலங் காரம் | தண்டி | கி.பி.12 | சைவர் | - | அணி |
| 11. | நன்னூல் | பவணந்தி முனிவர் | கி.பி.13 | சமணம் | மயிலைநாதர்,ஆண்டிப் புலவர் முதலிய பலர் | எழுத்து, சொல் |
| 12. | அகப்பொருள் விளக்கம் | நாற்கவிராச நம்பி | கி.பி.12 | சமணர் | நூலாசிரியர் | அகப்பொரு ள் |
| 13. | களவியற் காரிகை | - | கி.பி.13 | - | - | அகப்பொரு ள் |
| 14. | பன்னிரு பாட்டியல் | பலர் | கி.பி.12 க்கு முன் | - | - | பாட்டியல் |
| 15. | நவநீதப் பாட்டியல் | நவநீத நடனார் | கி.பி.14 | வைண வம் | - | பாட்டியல் |
| 16. | வரையறுத்த பாட்டியல் | - | - | சைவர் | - | பாட்டியல் |
| 17. | சிதம்பரப் பாட்டியல் | பரஞ்சோதி யார் | கி.பி.16 | சைவர் | - | பாட்டியல் |

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18. | மாறனலங்காரம் | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் | கி.பி.16 | வைணவர் | காரிரத்தினக் கவிராயர் | அணி |
| 19. | மாறனகப் பொருள் | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் | கி.பி.16 | வைணவர் | காரிரத்தினக் கவிராயர் | அகப்பொருள் |
| 20. | பாப்பாவினம் | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் | கி.பி.16 | வைணவர் | காரிரத்தினக் கவிராயர் | யாப்பு |
| 21. | சிதம்பரச் செய்யுட்கோவை | குமரகுபரர் | கி.பி.17 | சைவம் | - | யாப்பு |
| 22. | பிரயோக விவேகம் | சுப்பிரமணிய தீட்சிதர் | கி.பி.17 | சைவம் | நூலாசிரியர் | சொல் |
| 23. | இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் | கி.பி.17 | சைவம் | நூலாசிரியர் | ஐந்திலக்கணம் + பாட்டியல் |
| 24. | இலக்கணக் கொத்து | சாமிநாத தேசிகர் | கி.பி.17 | சைவம் | நூலாசிரியர் | சொல் |
| 25. | தொன்னூல் விளக்கம் | வீரமா முனிவர் | கி.பி.18 | கிறித்தவம் | நூலாசிரியர் | ஐந்திலக்கணம் + பாட்டியல் |
| 26. | பிரபந்த தீபிகை | முத்துவேங்கட சுப்பையர் | கி.பி.19 | சைவம் | - | பாட்டியல் |
| 27. | முத்து வீரியம் | முத்துவீர உபாத்தியாயர் | கி.பி.19 | சைவம் | திருப்பாற்கடல்நாதன் கவிராயர் | ஐந்திலக்கணம் + பாட்டியல் |
| 28. | சாமிநாதம் | சாமிகவிராயர் | கி.பி.19 | சைவம் | - | ஐந்திலக்கணமும் என்பர் |
| 29. | சந்திராலோகம் | 1.விசாகப் பெருமாளையர்<br>2.முத்துசாமி ஐயங்கார் | கி.பி.19<br>கி.பி.19 | சைவம்<br>வைணவம் | - | அணி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30. | குவலயானந்தம் | மாணிக்கவாசகர் | கி.பி.19 | சைவம் | - | அணி |

**கன்னட இலக்கண வரலாறு:**

கன்னட மொழி இலக்கணங்கள் பழங்காலந்தொட்டே வந்துள்ளன. அவற்றைத் தொடர்ந்தே கன்னட இலக்கண ஆராய்ச்சியும் வளர்ந்துள்ளது. "கன்னட மொழியில் தோன்றியுள்ளப் பல இலக்கணங்களில், நிரூபதுங்கன் அவையில் தோன்றிய கவிராஜமார்க்கமும், இரண்டாம் நாகவர்மவால் எழுதப்பட்ட காவியாவ்லோகனா, கர்நாடக பாஷாபூஷணா ஆகிய இலக்கணங்களும், கேசிராஜா எழுதிய சப்தமணிதர்பணாவும், பட்டாகளங்கா எழுதிய கர்நாட்டக சப்தாநுசாசனாவும் மிகச் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன" (திராவிட மொழிகள் 1., 2021., ப.209) என டாக்டர். ச. அகத்தியலிங்கம் திராவிட மொழிகள் 1 என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

கி.பி.9ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1900 வரை தோன்றிய கன்னட இலக்கண நூல்களைத் திராவிட மொழிகள் என்னும் நூலில் டாக்டர்.ச.அகத்தியலிங்கம் கூறுவதைக் கொண்டு இங்கு கன்னட இலக்கண நூல்கள் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. அவையாவன, கவிராஜ மார்க்கம், சந்தோம்புதி, காவியாவலோகனா, கர்நாடக பாஷாபூஷணா, சப்தமணிதர்ப்பணா, கர்நாட்டக சப்தாநுசாசனம், ஹொச கன்னட நுடி கன்னடி ஆகிய ஏழு நூல்கள் கன்னட இலக்கணம் பற்றி பேசும் நூல்களாகும்.

| வ. எண் | நூல் | ஆசிரியர் | காலம் | சமயம் | உரையாசிரியர் | இலக்கண வகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | கவிராஜ மார்க்கம் | பலர் | கி.பி.9 | - | பலர் | யாப்பு, அணி |
| 2. | சந்தோம்புதி | முதல் நாகவர்மன் | கி.பி.10 | - | முதல் நாகவர்மன் | யாப்பு |
| 3. | காவியாவலோகனா | இரண்டாம் நாகவர்மன் | கி.பி.12 | ஜைனம் | இரண்டாம் நாகவர்மன் | அணி, எழுத்து, சொல் |
| 4. | கர்நாடக பாஷாபூஷணா | இரண்டாம் நாகவர்மன் | கி.பி.12 | ஜைனம் | இரண்டாம் நாகவர்மன் | எழுத்து, சொல் |
| 5. | சப்தமணிதர்ப்பணா | கேசிராஜா | 1275 | - | கேசிராஜா | எழுத்து, சொல் |

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | கர்நாட்டக சப்தாநுசாசனம் | பட்டாகளங்கா | கி.பி.17 | - | பட்டாகளங்கா | எழுத்து, சொல் |
| 7. | ஹொச கன்னட நுடி கன்னடி | கிருஷ்ணமாச் சாரி | 1838 | - | கிருஷ்ணமாச் சாரி | பேச்சு மொழிக் கு |

**தமிழ் – கன்னட மொழிகளின் இலக்கண வரலாறு:**

தமிழ் – கன்னட மொழிகளில் காலந்தோறும் இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன என்பது மேற்கூறியவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இரு மொழிகளிலும் காலத்தின் தேவைக்கேற்ப நூல்கள் எழுந்துள்ளன. அவைகளை

1. தாய்மொழிக்காரர்கள் அம் மொழியினைப் பயிலுவதற்கு என எழுதப்பட்ட நூல்கள்

2. பிற மொழிக்காரர்களுக்கு தம் தாய்மொழியினைக் கற்பிக்க எழுதப்பட்ட நூல்கள்

3. தம் மொழியினை பிறமொழியினருக்காக அவர்களுடைய மொழியில் (கர்நாடக பாஷாபூஷணா என்னும் கன்னட நூல், வடமொழிக்காரர்களுக்குக் கன்னடத்தைப் பயிற்றுவிக்க சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது) எழுதப்பட்ட நூல்கள் என காலந்தோறும் தமிழ் – கன்னட மொழிகளில் எழுந்துள்ள இலக்கண நூல்களை வரிசைப்படுத்திக் காண முடிகிறது. ஆகையால் மொழியானது காலந்தோறும் மாற்றத்திற்குள்ளாகும் பொழுது அவைகளை ஒருதிறப்படுத்தி எழுதுவர் இலக்கணிகள்.

12ம் நூற்றாண்டிற்குப் பிறகு இலக்கண நூலெழுதும் ஆசிரியர்களே உரையும் எழுதியுள்ளனர். இதற்கு முன்னர் ஒரு நூலினை ஒரு ஆசிரியர் எழுத பின்னர் வந்தவர்கள் உரை எழுதி அந்நூலினைப் பதிப்பித்தனர்.

தமிழில் 12ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டு வரை அகப்பொருள், பாட்டியல் இலக்கண நூல்கள் மட்டுமே வந்துள்ளன. இக்காலங்களில் மற்ற இலக்கணங்கள் வரவில்லை என்பதுக் குறிப்பிடத்தக்கது. ஆனால் கன்னடத்தில் 12-16ம் நூற்றாண்டுகளில் மொழிக்கான இலக்கணங்களான எழுத்து, சொல்லிலக்கணங்கள் தோன்றியுள்ளன. அவைகள் கன்னட மொழியினை வடமொழியினருக்குக் கற்பிற்க சமஸ்கிருதத்தில் பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன.

தமிழில் 17-19ம் நூற்றாண்டு வரை வந்துள்ள இலக்கண நூல்கள் ஐந்திலக்கணமும், பாட்டியல் இலக்கணமும் சேர்ந்தே வெளிவந்துள்ளன. இதிலிருந்து சிற்றிலக்கியங்களும் மொழியில் பெரும்பங்கு வகித்துள்ளதைக் காணமுடிகிறது. கன்னட மொழியில் இந்நூற்றாண்டுகளில் புதுக்கன்னட மொழிக்கான இலக்கணங்கள் தோன்றியுள்ளன. முதலில் பேச்சு மொழிக்கான இலக்கணமும்,

பின்னர் புதுக்கன்னட மொழிக்கான எழுத்து, சொல்லிலக்கணங்களும், யாப்பு, அணி இலக்கணங்களும் தோன்றியுள்ளன.

**முடிவுரை:**

இதிலிருந்து இருமொழிகளின் இலக்கண நூல்களை வரலாற்றமைப்பில் காணும் பொழுது, சமயத்தைப் பரப்ப வருபவர்கள், பிறமொழியினர்கள் - இரண்டாம் மொழியாக கற்க, தாய்மொழிக்காரக்கள் – தாய்மொழி கற்க என மொழிப் பயில்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு மொழிக்கான இலக்கணங்கள் காலந்தோறும் மொழியைக் கற்கவும், கற்பிக்கவும் தோன்றிய வண்ணம் இருமொழியிலும் இருந்துள்ளன. மொழியில், சமூகத்தில் ஏற்படும் பிரதிபலிப்பை இலக்கிய நூல்கள் காட்டுகின்றன என்பதால் இலக்கியங்களுக்கேற்ப இலக்கணங்களும் காலந்தோறும் தோன்றியுள்ளன. செய்யுள், கவிதை அமைப்புகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ளப் புதுமைகளுக்கு யாப்பு, சந்தம், ஓசை, அணி போன்றவைகளுக்கு இலக்கணம் கூற யாப்பு, அணி நூல்களும், இச்செய்யுள்களில் அகம் பற்றி, புறம் பற்றி புதுமைகளாக வந்துள்ளவைகளுக்கு அகப்பொருள் விளக்கம் போன்ற இலக்கண நூல்களும் காலந்தோறும் மொழியில் உருவாகியுள்ளன என்பது இக்கட்டுரையிலிருந்துத் தெரிந்துகொள்ள முடிகிறது. இவ்வாறு இலக்கண நூல்கள் தோன்றப் பல்வேறு காரணங்கள் உள்ளன என்பதும் இக்கட்டுரையிலிருந்துத் தெரிந்துகொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்:**

**[1].** Kittel.F Rev., A Grammar of Kannada Language , Asian Educational Services, New Delhi, 1993

**[2].** Kushalappa Gowda.K., A Grammar of Kannada, Annamalai University, Annamalai Nagar, Tamil Nadu, 1972

**[3].** Shanmugam.s.v., A Historical Grammar Of Tamil, Central Institute of Classical Tamil, Chennai, 2021

**[4].** அகத்தியலிங்கம்.ச., இந்திய மொழிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: 2021

**[5].** அகத்தியலிங்கம்.ச., திராவிட மொழிகள் 1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை: 2021

**[6].** இளங்குமரன்.இரா., இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2020

**[7].** இளங்குமரன்.இரா., இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2022

**[8].** இளவரசு.சோம., இலக்கண வரலாறு., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2014

**[9].** கோமதிநாயகம்.பி., தென்னிந்திய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2013

**[10].** சண்முகதாஸ்.அ., தமிழ்மொழி இலக்கண இயல்புகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 1982

**[11].** சண்முகம்.செ.வை., இலக்கண உருவாக்கம், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2017

**[12].** மணியன்.தங்க., திராவிட மொழிகளின் ஒப்பீட்டாய்வு, கவிதா ஆர்ட் பிரிண்டர்ஸ், கீழ்ப்பாக்கம், சென்னை, 2004

**[13].** வேலுப்பிள்ளை.ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை, 1966

**[14].** ஜான் சாமுவேல்., திராவிட மொழிகளின் ஒப்பாய்வு, ஆசியவியல் நிறுவனம், சென்னை.

**கட்டுரைகள்/ஆய்வேடுகள்**

[1]. கன்னட இலக்கணம்., talkpal

[2]. கன்னட மொழி: அதன் தோற்றம் வளர்ச்சிநிலை., hmtramesh

[3]. ஜெயலலிதா., கன்னட மொழியின் முதல் இலக்கணநூல்: சப்தமணிதர்பணம்

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026